கோரிக்கை மற்றும் இதர பிரச்சினையில் ஒப்பந்த ஷரத்துக்களைப் பொதுவாக ஏற்றுக்கொள்ள இசைந்து இருப்பதாவும், திருமண உதவி கோரிக்கைப் பிரச்சினையில் ஒரு இணக்கம் ஏற்படாத நிலையில் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவது தாமதமாகி வருகிறது எனவும் அறியப் பட்டது.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை கோவை தொழிலாளர் அலுவலர் முன்பு 5-4-1990 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய நிலைமை தற்போது இல்லை என்றும் நிலைமை அமைதியாக உள்ளதாகவும் அறியப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு.சா.சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1990-91 விவாதமும் வாக்கெடுப்பும் — (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 17—கல்வி (தொடர்ச்சி)—

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்கு நன்றி.

பொதுவாக கல்விக்காக மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றாலும் கூட அந்த நிதி கிராம மக்களுக்குச் சென்று சேர்கிற வகையில் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டாகவேண்டும். கிராமப்புறங் களில் பள்ளிகள் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றன. இங்கே கூட புகைப்படங்களை நான் வைத்திருக்கிறேன். மரத்த டியில் பள்ளிக்கூடங்கள் நடப்பது என்பது வாடிக்கையாக ஆகிவிட் டது, எந்தத் தொகுதியில் பார்த்தாலும் தொடக்கப்பள்ளிகள் பெரும்பாலும் மரத்தடியில் நடப்பதைப் பார்க்கிறோம். பள்ளி களைச் சீரமைக்க நிதி ஒதுக்கப்படுகிறது என்று முன்பே இந்த அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, 14 விழுக்காடு நிதியை அதாவது ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதியில் 14 விழுக்காட்டை இதற்காகச் செலவிடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் குறிப்பாக எந்த ஒரு ஒன்றியத்திலும் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.